# மெட்ராஸ் உயர் நீதிமன்றம்

அறிவிக்கை எண். 73/2025 நாள். 06.04.2025

| | |
|---|---|
| அறிவிக்கை நாள் | 06.04.2025 |
| இணையதளம் வாயிலாக பதிவு செய்ய மற்றும் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் | 05.05.2025 |
| இணையதளம் வாயிலாக கட்டணம் செலுத்துவதற்கான கடைசி நாள் | 06.05.2025 |

மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தில் (i)தூய்மைப் பணியாளர் (Sweeper) (ii) தோட்டப்பணியாளர் (Gardener) (iii) வாட்டர்மேன் (Waterman) (iv) சுகாதார பணியாளர் (Sanitary Worker) மற்றும் (v) காவலர் (Watchman) பதவிகளுக்கு நேரடி தேர்வின் மூலம் தெரிவு செய்வதற்கு இணையதளம் வாயிலாக மட்டும் (**https://www.mhc.tn.gov.in**) தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**குறிப்பு**

1. இந்த அறிவிக்கையும் சென்னை உயர்நீதிமன்ற பதவிகளில் காலியாக உள்ள சோப்தார், அலுவலக உதவியாளர், வீட்டு உதவியாளர் மற்றும் ரூம் பாய் போன்ற பணியிடங்களை நிரப்புவதற்காக வெளியிடப்பட்டுள்ள அறிவிக்கையும் (அறிவிக்கை எண். 72/2025) ஒன்றுக்கொன்று தொடர்புடையன.

2. இந்த இரண்டு அறிவிக்கைகளுக்கும் (எண். 72/2025 & எண். 73/2025) விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு ஒரே ஒரு பொது எழுத்துத் தேர்வு தான் நடத்தப்படும்.

3. ஒரு விண்ணப்பதாரர் இரண்டு அறிவிக்கைகளிலும், அறிவிக்கப்பட்டுள்ள அனைத்து பதவிகளுக்கோ / ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கோ விண்ணப்பித்து, ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு தேர்ச்சி பெற்றிருந்தால், தகுதி மற்றும் வகுப்புவாரி இட ஒதுக்கீட்டின் அடிப்படையில், கீழ்க்கண்ட வரிசை முறையில் ஒரு பதவிக்கு தேர்வு செய்யப்படுவார்.

(i) சோப்தார்

(ii) அலுவலக உதவியாளர்

(iii) வீட்டு உதவியாளர்

(iv) ரூம் பாய

(v) தூய்மைப் பணியாளர்

(vi) தோட்டப் பணியாளர்

(vii) வாட்டர்மேன்

(viii) சுகாதார பணியாளர்

(ix) காவலர்

அவ்வாறு அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவியை மாற்றக் கோரும் கோரிக்கைகள் எந்த சூழ்நிலையிலும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

4. ஒவ்வொரு அறிவிக்கைக்கும் தனித்தனியாக தேர்வுக் கட்டணம் கணக்கிடப்படும்.

பொது எழுத்துத் தேர்வில், குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்களை பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு அவர்களின் கோரிக்கைகளை (Claims) நிரூபிக்க தேவையான ஆதாரங்களை கோரும் போது கண்டிப்பாக பதிவேற்றம் செய்ய/ சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு, தேவையான ஆவணங்களை பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்க சென்னை உயர்நீதிமன்ற ஆட்சேர்ப்பு (போர்ட்டல்) இணையதளத்தில 72 மணி நேரம் கால அவகாசம் அளிக்கப்படும். அவ்வாறு குறிப்பிட்ட காலத்திற்கு பின்னர் பதிவேற்றம் செய்யப்பட்ட ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலும், அந்த ஆவணங்களின் அடிப்படையில் கோரியுள்ள விண்ணப்பதாரர்களின் கோரிக்கைகள் (Claims) / விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். குறிப்பிட்ட காலத்திற்குள் தேவையான

ஆவணங்களை சமர்ப்பிக்க தவறிய விண்ணப்பதாரர்களுக்கு, கூடுதல் கால அவகாசம் வழங்கப்படமாட்டாது.

**குறிப்பு**

அ) https://www.mhc.tn.gov.in என்ற இணையதள முகவரியில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். ஏனைய முறைகளான அஞ்சல், கூரியர், பதிவுஅஞ்சல், மின்னஞ்சல் மற்றும் நேரடியாக சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள் எந்தவொரு காரணத்திற்காகவும், எச்சூழ்நிலையிலும ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது. இது தொடர்பான கடிதப் போக்குவரதது எந்த சூழ்நிலையிலும் மேற்க்கொள்ளப்படமாட்டாது.

ஆ) விண்ணப்பதாரர்கள் இணையதள விண்ணப்பத்தினை பூர்த்தி செய்வதற்கு முன்பாக, அவர்கள் மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் ஆட்சேர்ப்பு இணையதளத்தில் (https://www.mhc.tn.gov.in) தூய்மைப் பணியாளா, தோட்டப்பணியாளா போன்ற பதவிகளுக்கான 'அறிவிக்கை' மற்றும் 'பொதுவான அறிவுரைகளை' பின்பற்றி விண்ணப்பங்களை பூர்த்தி செய்ய அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இ) விண்ணப்பதாரர்கள் கணினி அல்லது மடிக்கணினியின் வாயிலாக மட்டுமே இணையத்தளம் மூலமாக விண்ணப்பிக்க வேண்டும். அலைபேசி (Cellular Phone) அல்லது வரைபட்டிகை (Tab) யின் மூலம் விண்ணப்பிக்க இயலாது. ஏனெனில் விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்வதற்கு கணினி மற்றும் மடிக்கணினியின் வாயிலாக மட்டுமே பதிவு செய்ய ஏதுவாக இருக்கும்.

ஈ) அனைத்து பிரிவுகளை சார்ந்த, விண்ணப்பதாரர்கள் தங்களது அடிப்படை விவரங்களை பதிவு செய்வது கட்டாயமாகும். பின்னர் அறிவிக்கையல் கொடுக்கப்பட்டுள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்க, ஆட்சேர்ப்பு இணையதளத்தில் பரிந்துரைக்கப்பட்ட தேர்வுக் கட்டணத்தை செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும். கட்டண விலக்கு பெற்றவர்கள் தேர்வு கட்டணத்தை செலுத்த வேண்டியதில்லை.

உ) எந்தவொரு பதவிக்கும், பதிவு செய்வது மட்டுமே ஒரு விண்ணப்பமாக கருதப்படமாட்டாது. இணையதளம் மூலம் ஆட்சேர்ப்புக்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும்போது கொடுக்கப்படும் விவரங்கள்/ தகவல்கள் மட்டுமே கருத்தில் கொள்ளப்படும். ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பத்தில், தவறான மற்றும் முழுமையற்ற தகவல்களை கொடுப்பது அல்லது தேவையான விவரங்களை கொடுக்காமலிருப்பது போன்றவற்றால் ஏற்படும் விளைவுகளுக்கு மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் ஆட்சேர்ப்பு பிரிவு எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.

ஊ) விண்ணப்பதாரர்கள் தகுதியற்றவர் என தேர்வு செய்யப்படும் பொழுது கண்டறியப்பட்டால், அவர்கள் எநத கட்டத்திலும் தகுதி நீக்கம் செய்யப்படுவார்.

எ) அறிவிக்கப்பட்ட அனைத்து பதவிகளுக்கும் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்து அவர்கள் அனைத்து அல்லது ஒன்றிற்கும் மேற்பட்ட பதவிகளுக்கு (தகுதியின் அடிப்படையிலும் மற்றும் வகுப்பு சுழற்சி முறையிலும்) தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர்களுடைய விண்ணபபங்கள் மேற்கண்ட பதவிகளின் வரிசையில் பரிசீலிக்கப்படும், இது தொடர்பான கடித போக்குவரத்து ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஏ) விண்ணப்பதாரர்கள் விரும்பிய பதவி / பதவிகளுக்கு ஒரு முறை மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த பல விண்ணப்பங்களால் எழும் பிரச்சனைகளுக்கு நீதித்துறை ஆட்சேர்ப்பு பிரிவு, மெட்ராஸ் உயர்நீதிமன்றம் பொறுப்பேற்காது. எனவே விண்ணப்பதாரர்கள் பதவி / பதவிகளுக்கு விண்ணப்பிக்கும்போது எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

ஐ) அறிவிக்கை மற்றும் விண்ணப்பதாரர்களுக்கான பொதுவான வழிமுறைகள ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழியில் கொடுக்கப்பட்டுள்ளது. இவற்றினுள் ஏதேனும் முரண்பாடு இருப்பின் ஆங்கில மொழி அறிவிக்கையே இறுதியானது.

ஒ)

(i) பதிலி எழுத்தரின் சேவையை கோரும் மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர்கள் தங்களுக்கு எழுதுவதில் (வேகம் உட்பட) உள்ள குறைபாட்டினை குறிப்பிட்டு, அவருக்கு பதிலாக தேர்வை எழுதுவதற்கு பதிலி எழுத்தரை நியமிக்கலாம் என்ற பரிந்துரையை அரசு மருத்துவரிடம் மாற்றுத்திறனாளிகள் நல (டிஏப்பி 3.2) துறையின், 21.09.2021 ஆம் தேதியிட்ட அரசு ஆணை நிலை எண்.08ல் குறிப்பிட்டுள்ள இணைப்பு-1ன் படி சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். "மாற்றுத்திறனாளிகளுக்காக தேர்வை நடத்துவதற்கான தமிழ்நாடு அரசின் வழிகாட்டுதல்கள், 2021-ன்படி", பொது எழுத்துத் தேர்வுக்கு மட்டும் பதிலி எழுத்தர் அனுமதிக்கப்படுவர்.

(ii) தேர்வர்கள் தங்களின் விருப்பிற்கேற்ப சொந்த பதிலி எழுத்தரையோ அல்லது JRC பதிலி எழுத்தரையோ தெரிவு செய்து கொள்ளலாம்.

(iii) தேர்வர்கள் தங்களது சொந்த பதிலி எழுத்தரை அழைத்து வரும் பட்சத்தில், அப்பதிலி எழுத்தரின் கல்வித் தகுதியானது

தேர்வரின் கல்வித் தகுதியை விட ஒரு படி குறைவாக இருததல் வேண்டும். எனினும், பதிலி எழுத்தரின் கல்வித் தகுதி பத்தாம் வகுப்பிற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

(iv) JRC பதிலி எழுத்தரின் சேவையை கோரும் மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர்கள் பின்வரும் சான்றிதழ்களை தேர்வு மையத்தில் சமர்ப்பிக்க வேண்டும்:-

a) மாற்றுத்திறனாளி சான்றிதழ்
b) மாற்றுத்திறனாளிகள் நல (டிஏப்பி 3.2) துறையின், 21.09.2021ஆம் தேதியிட்ட அரசு ஆணை நிலை எண்.08ல் குறிப்பிட்டுள்ள இணைப்பு-1ன் படி மருத்துவரின் சான்றிதழ.

(v) சொந்த பதிலி எழுத்தரின் சேவையை கோரும் மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர்கள் பின்வரும் சான்றிதழ்களை தேர்வு மையத்தில் சமர்ப்பிக்க வேண்டும்:-

a) மாற்றுத்திறனாளி சான்றிதழ்
b) மாற்றுத்திறனாளிகள் நல (டிஏப்பி 3.2) துறையின், 21.09.2021ஆம் தேதியிட்ட அரசு ஆணை நிலை எண்.08ல் குறிப்பிட்டுள்ள இணைப்பு-1ன் படி மருத்துவரின் சான்றிதழ.
c) மாற்றுத்திறனாளிகள் நல (டிஏப்பி 3.2) துறையின், 21.09.2021ஆம் தேதியிட்ட அரசு ஆணை நிலை எண்.08ல் குறிப்பிட்டுள்ள இணைப்பு-2ன் படி உறுதிமொழி கடிதம்.

ஓ)இறுதிப் பட்டியல் தயாரிக்கும்போது, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட விண்ணப்பதாரர்களின் தகுதிகள் இணையாக அமையும்போது, விண்ணப்பதாரர் “முதன்மையான சாரணர்” விருது பெற்றிருப்பாராயின் அவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். (இந்திய குடியரசுத் தலைவரிடம் “முதன்மையான சாரணர்” என்ற விருதைப் பெற்றவர்) [பிரிவு 16 தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனை) சட்டம், 2016]

**கவனத்திற்கு**

- மெட்ராஸ் உயர்நீதிமன்ற நீதித்துறை ஆட்சேர்ப்பு பிரிவின் அனைத்து ஆட்சேர்ப்புகளும் தகுதியின் அடிப்படையிலேயே நடத்தப்படுகிறது.
- நேர்மையற்ற முறையில் வேலை வாங்கித்தருவதாக உறுதி அளித்து ஏமாற்றும் மோசடியாளர்கள் மற்றும் தரகர்களிடமிருந்து

விண்ணப்பதாரர்கள் தங்களை காத்துக்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.

- அவ்வாறான நேர்மையற்ற நபர்களால் விண்ணப்பதாராகள பாதிக்கப்பட்டு அதனால் அவர்களுக்கு உண்டாகும் கஷ்ட நஷ்டங்களுக்கு மெட்ராஸ் உயர்நீதிமன்ற ஆட்சேர்ப்பு பிரிவு எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.
- விண்ணப்பதாரர் அவ்வாறான நியாயமற்ற முறையில் வேலை பெறுவதற்கு நேரடியாகவோ அல்லது வேறு நபர் வாயிலாகவோ ஆட்சேர்ப்பு பிரிவை அணுகினால் அவர் வேலை பெறும் தகுதியை இழந்துவிடுவார்.
- இந்த அறிவிப்பிற்கான அதிகபட்ச கல்வித் தகுதி 12ஆம் வகுப்பு அல்லது அதற்கு நிகரான கல்வித் தகுதி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், குறைந்தபட்ச கல்வித் தகுதியாக 8ஆம் வகுப்பு அல்லது அதற்கு நிகரானதாக இருத்தல் வேண்டும்.
- அதனால், விண்ணப்பதாரர் "விண்ணப்பம் சமர்ப்பிக்கும் அன்று தனது கல்வித் தகுதியானது, நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச கல்வித் தகுதியான –2 அல்லது அதற்கு இணையான கல்விப்படிப்புக்கு மேலாக எவ்வித உயர்படிப்பு படிக்கவில்லை/உயர் படிப்பை தொடரவில்லை என்ற **உறுதிமொழியை** இணையதள விண்ணப்பத்தில் பதிவு செயய வேண்டும். விண்ணப்பதாரர், இந்த அறிவிப்பிற்கான அதிகபட்ச கல்வித்தகுதியாக நிர்ணயிக்கப்பட்ட 12ஆம் வகுப்பிற்கு மேல் படித்து அதை விண்ணப்பிகும் போது மறைத்திருந்தால் சட்டப்படியான நடவடிக்கை மற்றும் குற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.
- இணையதளம் மூலம் சமர்ப்பிக்கப்படும் அனைத்து விவரங்களுக்கும் விண்ணப்பதாரரே பொறுப்பாவார். இணையதள விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும்போது தவறான தகவல் தரப்பட்டிருந்தால் அதற்கு இணையதள சேவையகம்/ பொது சேவை மையங்கள் உள்ளிட்ட சேவை வழங்குவோரை குறை கூற இயலாது. **விண்ணப்பதாரர்கள் இறுதியாக விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கு முன்பு, தாங்கள் பூர்த்தி செய்த விண்ணப்பத்தை ஒருமுறை சரிபார்த்து அதன்பின் சமர்ப்பிக்கவும். சமர்ப்பித்த பின் எவ்வித திருத்தமும் மேற்கொள்ள முடியாது.**

## 2. காலிப் பணியிடங்கள் மற்றும் சம்பள விகிதம

| வ.எண். | பதவியின் பெயர் | காலிப் பணி இடங்களின் எண்ணிக்கை | சம்பள ஏற்றமுறை (திருத்தியமைக்கப் பட்டது) |
|---|---|---|---|
| 1) | தூய்மைப் பணியாளர் (Sweeper) | 73 | சம்பள நிலை-1 ரூ.15,700-58,100 – Special Compensatory Allowance |
| 2) | தோட்டப்பணியாளர் (Gardener) | 24 | |
| 3) | வாட்டர்மேன் (Waterman) | 2 | |
| 4) | சுகாதார பணியாளர் (Sanitary Worker) | 49 | |
| 5) | காவலர் (Watchman) | 4 | |

## 3. காலிப்பணியிடங்களின் பகிர்வு

காலிப் பணியிடங்கள் மற்றும் அதன் பங்கீடு இந்த அறிவிக்கையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

**குறிப்பு:-** விளம்பரப்படுத்தப்படும் பதவிகளுக்கான காலி பணியிட எண்ணிக்கையானது தோராயமானது. தெரிவுப்பணிகள் இறுதிசெய்யப்படுவதற்குமுன் எந்த நேரத்திலும் காலி பணியிட எண்ணிக்கை குறைப்பு மற்றும் அதிகரிப்பு உட்பட எந்த மாறுதலுக்கும் உட்பட்டதாகும்,

## (4) தகுதிகள்

### (A) வயது வரம்பு (01.07.2025 அன்று உள்ளவாறு)

| வ. எண். | வகையினம் | நிறைவடைய வேண்டிய குறைந்தபட்ச வயது | உட்பட்டிருக்க வேண்டிய அதிகபட்ச வயது |
|---|---|---|---|
| 1. | **ஒதுக்கீடு வகையினர்கள்**<br>(ஆதிதிராவிட வகுப்பினர்/ஆதிதிராவிட அருந்ததியர்/பழங்குடி வகுப்பினர்/மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் & சீர் மரபினர்/ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர்) | 18 வயது | 37* வயது |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் எல்லா வகுப்பை சார்ந்த ஆதரவற்ற விதவைகள்) | | |
| 2. | **மற்றவர்கள/ ஒதுக்கீடு வகையை சார்ந்தவர் அல்லாதவர்கள்**<br><br>(கீழ்க்கண்ட வகுப்பை சாராதவராக இருத்தல் வேண்டும்.<br><br>ஆதிதிராவிட வகுப்பினர்/ஆதிதிராவிட அருந்ததியர்/பழங்குடி வகுப்பினர்/மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் & சீர் மரபினர்/ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர்), [மற்ற மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களை (அதாவது தமிழ்நாட்டினைத் தவிர/ புதுச்சேரி யூனியன் பிரதேசத்தைத் தவிர) சேர்ந்தவர்கள், அவர்களுடைய மாநிலங்களில் அல்லது யூனியன் பிரதேசங்களில் இட ஒதுக்கீடு கோர தகுதியான வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் 'மற்றவர்கள்' (Unreserved Category - UR) என்றே கருதப்படுவர்]. | 18 வயது | 32* வயது |
| 3. | **பணியிலுள்ள விண்ணப்பதாரர்களுக்காக**<br><br>'பணியிலுள்ள விண்ணப்பதாரர்கள்' என்றால் -மெட்ராஸ் உயர்நீதி மன்ற பணி அல்லது தமிழ்நாடு நீதித்துறை அமைச்சு பணியில் முழுநேர பணியாளர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தகுதிகாண் பருவத்தினர்/தகுதிகாண் பருவம் நிறைவடையாதவர். | 18 வயது | 47* வயது |

*G.O. Ms. No. 91, மனித வள மேலாண்மை துறை, தேதி 13.09.2021 படி, நேரடி ஆட்சேர்ப்பிற்கு விண்ணப்பிப்பவர்களுக்கு அதிகபட்ச வயது வரம்பு 2 வருடங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளது.

**குறிப்பு** - மற்றவர்கள் (அதாவது ஆதிதிராவிடர் வகுப்பினர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்), பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிறபடுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்கள்) தவிர) எவரேனும் மத்திய/மாநில அரசுத்துறைகளில் 5 வருட பணி முடித்திருந்தால் அவர்கள் வயது வரம்பிற்குள் இருந்தாலும் அவர்கள் தகுதியற்றவர்கள் ஆவர்.

**விளக்கம்**

(i) விண்ணப்பதாரர்கள் 01.07.2007-ஆம் தேதிக்கு பின்னர் பிறந்தவராக இருத்தல் கூடாது மற்றும் கீழே கொடுக்கப்பட்டுள்ள தேதிகளுக்கு முன்பும் பிறந்திருக்கக்கூடாது.

அ) 02.07.1988 (ஒதுக்கீட்டுப் பிரிவின் கீழ்வரும் ஆதிதிராவிட வகுப்பினர்/ ஆதிதிராவிட அருந்ததியர்/பழங்குடியின வகுப்பினர்/மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் & சீர் மரபினர்/பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர்).

ஆ) 02.07.1993 (ஒதுக்கீட்டுப் பிரிவின் கீழ் சாராத விண்ணப்பதாரர்கள் மற்றும் பிற மாநில / யூனியன் பிரதேசங்களின் விண்ணப்பதாரர்கள).

இ) 02.07.1978 (பணியிலுள்ள விண்ணப்பதாரர்கள்).

(ii) இருப்பினும், கழகண்ட வகை விண்ணப்பதாரர்களுக்கு மேற்குறிப்பிட்ட அதிகபட்ச வயது வரம்பு பொருந்தாது.

**a. மாற்றுத்திறனாளிகள்**

தகுதிவாய்ந்த மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர்கள் (மாற்றுத்திறனாளிகளின் உடல் குறைபாட்டின் அளவு 40% அல்லது அதற்கு மேலாக இருத்தல் வேண்டும்) நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பை விட பத்து வருடங்கள் வயது தளர்வை பெற உரிமையுடையவர்கள் ஆவார்கள். அவ்வாறான விண்ணப்பதாரர்கள் 27.07.2018ந் தேதியிட்ட அரசு ஆணை நிலை எண்.28 மாற்றுத்திறனாளிகள் நலன் (டிஏபி 3.1) துறை ஆணையில் குறிப்பிட்ட படியும் மற்றும் இந்திய அரசு மாற்றுத்திறனாளிகளின் உரிமை விதிகள், 2017ல் இந்திய அரசு நிர்ணயித்துள்ள விதிகளின்படியும் பெறப்பட்ட சான்றிதழினை சமர்ப்பிக்க வேண்டும்.

**b. அரசுப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் மற்றும் தற்காலிக அரசுப் பணியாளர்கள்**

1.7.2025 அன்று 42 வயது நிறைவடையாத அரசுப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் மற்றும் தற்காலிக அரசுப் பணியாளர்கள், அவர்களுடைய வயதிலிருந்து அவர்கள் அரசுப்பணியில்

தொடர்ச்சியாகவோ அல்லது தொடர்ச்சியாக அல்லாமலோ அறிவிப்பு தேதி வரை இருந்த காலத்தை கழித்துக் கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

விளக்கம் - ஒரு விடுவிக்கப்பட்ட மாநில அரசுப் பணியாளர் என்பவர் பணியிடங்கள் குறைப்பு அல்லது ஒழுங்கு முறை நடவடிக்கை அல்லாத வேறேதும் காரணத்திற்காக மாநில அரசுப் பணியில் இருந்து விடுவிக்கப்பட்டவர் ஆவார். (பிரிவு 61 தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனை) சட்டம், 2016)

c. முன்னாள் இராணுவததினர் :

**(அ)** ஆதிதிராவிடர், ஆதிதிராவிட (அருந்ததியர்) வகுப்பினர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர் ஆகிய பிரிவுகளைச் **சாராத** முன்னாள் **இராணுவத்தி**னா 01.07.2025 அன்று 50** **வயதை** நிறைவு செய்யாதிருக்க வேண்டும்.

**(ஆ)** ஆதிதிராவிட வகுப்பினர், ஆதிதிராவிட (அருந்ததியர்) வகுப்பினர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர் ஆகிய பிரிவுகளை சார்ந்த **முன்னாள் இராணுவத்தினா** 01.07.2025 அன்று 55** **வயதை** நிறைவு செய்யாதிருக்க வேண்டும்.

(பிரிவு 63 தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனை) சட்டம், 2016)

(iii) தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியை சேர்ந்த ஆதிதிராவிட வகுப்பினர் அல்லது ஆதிதிராவிட வகுப்பினர் (அருந்ததியர்கள்) அல்லது பழங்குடியினர் அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் அல்லது பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் அல்லது பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்கள்) ஆகியவற்றில் ஏதேனும் ஒரு வகுப்பைச் சேர்ந்தவர்கள் மட்டுமே அந்தந்த வகுப்பினர்களாக கருதப்படுவார்கள். மற்ற மாநிலங்கள்/ யூனியன் பிரதேசங்களை (அதாவது தமிழ்நாட்டினைத் தவிர / புதுச்சேரி யூனியன் பிரதேசத்தைத் தவிர) சேர்ந்தவர்கள், அவர்களுடைய மாநிலங்களில் அல்லது யூனியன் பிரதேசங்களில் இட ஒதுக்கீடு கோர தகுதியான வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் 'மற்றவர்கள்' (Unreserved Category - UR) என்றே கருதப்படுவர். எனவே அவர்கள் எந்த ஒரு சூழ்நிலையிலும் வயது வரம்பில் தளர்வு அல்லது நியமனத்தில் முன்னுரிமை அல்லது கட்டணத்தில் தளர்வு என எச்சலுகைகளையும் கோர இயலாது. அவர்கள் விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்யும்போது 'மற்றவர்கள்' (Unreserved Category - UR) என்று

தேர்வு செய்து, தேவையான கட்டணத்தை செலுத்தி விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். மற்ற மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் (தமிழ்நாட்டினைத் தவிர / புதுச்சேரி யூனியன் பிரதேசத்தைத் தவிர) அவரவர்கள் மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் அவர்களுடைய வகுப்பினை குறிப்பிட்டு நிர்ணயிக்கப்பட்ட தேர்வுக் கட்டணத்தை செலுத்தாதிருந்தாலோ அல்லது வயது வரம்பு கடந்தவர்களாக இருந்தாலோ (01.07.2025 அன்று 32 வயது கடந்தவர்) அவர்களுடைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். இது சம்மந்தமாக எந்த ஒரு கடிதப்போக்குவரத்தும் எந்தச் சூழ்நிலையிலும் விண்ணப்பதாரர்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(iv) தமிழ்நாடு நீதித்துறை அமைச்சுப் பணிகள மற்றும் புதுச்சேரி நீதித்துறை அமைச்சுப்பணிகள், மத்திய அல்லது மாநில அரசுப் பணியிலுள்ள தகுதிகாண் பருவத்தினர்/ தகுதிகாண் பருவம் நிறைவடையாத/ தற்காலிக பணியாளர்களாக/நிரந்தர பணியாளர்களாக உள்ள விண்ணப்பதாரர்கள் / இவ்வறிவிப்பிற்கு பின் ஏதேனும் அரசு பணியில் சேர்ந்த விண்ணப்பதாரர்கள், தங்களது துறைதலைவரிடமிருந்து அல்லது நியமன அதிகாரியிடமிருந்து, தூய்மைப் பணியாளர், தோட்டப்பணியாளா மற்றும் அனைத்துப் பதவிகளுக்கான இவ்வறிக்கை மற்றும் பொதுவான அறிவுரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில (பின்னிணைப்பு-B) தடையின்மைச் சான்றிதழை இந்த அறிவிக்கைக்குப் பின் தேதியில பெற்று, அதனை உயர்நீதிமன்றம் கோரும் காலத்தில் சமாப்பிக்க வேண்டும். அவ்வாறு சான்றிதழை வழங்கத் தவறிய விண்ணப்பதாரர்களின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். <u>உயர்நீதிமன்ற பணிக்கு விண்ணப்பிக்கும்போது அரசு பணியில் இல்லாதவர், பிறகு மற்றொரு அரசுப் பணியில் சேர்ந்திருப்பின், அத்துறைத் தலைவரிடமிருந்து தடையில்லா சான்றிதழை பெற்று, கேட்கும்பொழுது சமர்ப்பிக்க வேண்டும்.</u> ஆனால், அவ்விண்ணப்பத்தாரர்கள் தங்களின் விண்ணப்பங்களை உரிய வழியாக சமர்ப்பிக்கத் தேவையில்லை. அவர்கள் தங்கள விண்ணப்பங்களை இணையதள வழியாக தங்களது துறைத் தலைவர் அல்லது நியமனம் செய்யும் அதிகாரியிடம் எழுத்துப்பூர்வமாகத் தெரிவித்த பின்னர் சமாப்பிக்கவேண்டும்.

## B. கல்வித்தகுதி

விண்ணப்பதாரர் அறிவிக்கை தேதியன்று, 8-ஆம் வகுப்பு தேர்ச்சி அல்லது அதற்கு இணையான படிப்பில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். அதிகபட்சமாக பன்னிரண்டாம் வகுப்பு அல்லது அதற்கு இணையான கல்விப் படிப்பிற்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர், தான் +2 கல்விப்படிப்புக்கு மேலாக எவ்வித உயர்படிப்பு படிக்கவில்லை/உயர் படிப்பை தொடரவில்லை என்ற உறுதிமொழியை பதிவு செய்ய வேண்டும். விண்ணப்பதாரர் தேவையான கல்வித்தகுதிக்கு மேலாக

படித்திருந்து, அதை விண்ணப்பிக்கும்போது மறைத்திருந்தால், அந்த நபர் மீது சட்ட நடவடிக்கை மற்றும் குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும்.

அனுபவ சான்றிதழ்களை வேலை பார்த்த அதிகாரியிடமிருந்தோ/ முதலாளியிடமிருந்தோ பெற வேண்டும்.

## 5. தேர்வுக் கட்டணம்:-

| வ.எண் | வகையினம் | கட்டணம் |
| --- | --- | --- |
| 1) | பொதுப்பிரிவினர்/பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர்/மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் & சீர்மரபினர்/மற்றவர்கள் | ரூ. 500/-<br>எத்தனை பதவிக்கு விண்ணப்பித்தாலும் |
| 2) | ஆதி திராவிடர் /ஆதி திராவிடா (அருந்ததியர்/பழங்குடியினர் | முழு விலக்களிக்கப்படுகிறது |
| 3) | எல்லா வகுப்பைச் சார்ந்த 40% அல்லது அதற்கும் மேல் குறைபாடுள்ள மாற்றுத் திறனாளிகள்/ஆதரவற்ற விதவைகள் | முழு விலக்களிக்கப்படுகிறது |

**குறிப்பு**

1. மேற்கண்ட வயது, கட்டணச் சலுகை, இடஒதுக்கீடு மற்றும் விண்ணபத்தில் குறிப்பிடப்பட்ட மற்ற முன்னுரிமை உள்ளிட்ட வேறு சலுகைகளைக் கோரும் விண்ணபதாரர்கள் தகுதிவாய்ந்த அதிகாரிகளால் கொடுக்கப்பட்ட முறையான சான்றிதழ்களை அறிவிப்பு தேதியில் பெற்று இருத்தல் வேண்டும மற்றும் கேட்கும்பொழுது சமர்ப்பித்தல் வேண்டும். ஆதரவற்ற விதவை சான்றிதழ் அறிவிப்பு தேதிக்கு பின்னர் பெறப்பட்டிருக்க வேண்டும்.
2. விண்ணபதாரர்கள் யாரேனும் தவறான தகவலின் அடிப்படையில் விண்ணப்பித்து வயது தளர்வு/கட்டண சலுகை பெற்றிருப்பது தெரியவந்தால், அவர்களின் விண்ணபங்கள் தெரிவின் பொழுது எந்த நேரத்திலும் நிராகரிக்கப்படும்.
3. எந்த ஒரு சூழ்நிலையிலும், விண்ணபதாரர்கள் செலுத்திய கட்டணம் திருப்பித் தரப்படமாட்டாது.

6. <u>தெரிவு செய்யும் முறைகள்</u>

(அ) பொது எழுத்துத்தேர்வு (ஆ) செயல்திறன் தேர்வ (Skill Test) மற்றும் (இ) சான்றிதழ் சரிபார்ப்பு போன்றவற்றின் அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

I **(அ) பொது எழுத்துத்தேர்வு**

(மொத்த மதிப்பெண்கள் 65 - கால அளவு - 90 நிமிடங்கள்)

பொது எழுத்துத்தேர்வு 65 கொள்குறிவகை (Objective type) கேள்விகளைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு மதிப்பெண் வழங்கப்படும். தவறான விடைக்கு மதிப்பெண்கள் குறைக்கப்படமாட்டாது. பொது எழுத்துத் தேர்வு, ஒரே தாளில் கீழே குறிப்பிடப்பட்டுளள இருபகுதிகளை கொண்டதாக இருக்கும்

| ***பகுதி*** | ***பாடம்*** | ***மொத்த மதிப்பெண்கள்*** | ***தகுதிக்கான குறைந்தபட்ச மதிப்பெண்கள்*** |
|---|---|---|---|
| பகுதி அ | தமிழ தகுதித்தேர்வு *(ஆங்கில மொழியை தேர்வு செய்த மாற்று திறனாளிகளுக்கு மட்டும், பொது ஆங்கிலத் தேர்வ) | 25 | 10 |
| பகுதி ஆ | அடிப்படை அறிவ (தமிழ் மற்றும் ஆங்கில மொழியில) | 40 | 10 |
| <u>குறிப்ப:-</u> 23.05.2022ஆம் தேதியிட்ட அரசாணை (நிலை) எண.49, மனிதவள மேலாண்மை (எம்) துறையின்படி, ஆங்கில மொழிப் பாடம் மட்டுமே படித்த மாற்றுத்திறனாளிகளுக்கு தமிழ் மொழித்தாள் எழுதுவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. எனவே அவர்கள் தமிழ் அல்லது ஆங்கில மொழியை அவர்களின் விருப்பத்திற்கேற்ப தேர்ந்தெடுத்து கொள்ளலாம். ஆங்கில மொழியை தேர்வு செய்தவர்களுக்கென்று பொது ஆங்கிலத் தேர்வு நடத்தப்படும். இவ்விலக்கு 40 சதவீதத்திற்கும் குறைவான குறைபாடுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கும் இது பொருந்தும. | | | |

**<u>பாடத்திட்டம் - பொது எழுத்துத் தேர்வு</u>**

(தமிழ்நாடு அரசு பாடத்திட்டம் - 8ம் வகுப்பு வரை )

| | |
|---|---|
| பகுதி -அ<br><br>தமிழ் தகுதித்தேர்வு | 1. பொது தமிழ்<br>அல்லது<br>2. பொது ஆங்கிலம் (ஆங்கில மொழியை தேர்வு செய்த மாற்று திறனாளிகளுக்கு மட்டும், பொது ஆங்கிலத் தேர்வு) |
| பகுதி -ஆ<br><br>அடிப்படை அறிவு | நடப்பு நிகழ்வுகள், அடிப்படை கணித திறன் மற்றும் வீட்டு பராமரிப்பு முறைகள், சுகாதாரம், உணவு தயாரிப்பு, உணவு மற்றும் பானங்கள் பரிமாறுதல் பற்றிய பொது அறிவு, அலுவலக பராமரிப்பு, அலுவலக பொருட்கள் / சாதனங்கள் பராமரிப்பு உட்பட பொது அறிவு அறிந்திருத்தல் வேண்டும். கேள்விகள் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் கொடுக்கப்பட்டிருக்கும். தமிழ் மற்றும் ஆங்கில கேள்விகளில் வேறுபாடு இருப்பின், ஆங்கில மொழியில் கேட்கப்படும் கேள்வியே இறுதியானது. |

**<u>குறிப்பு</u>**

- விண்ணப்பதாரர்கள் பகுதி அ மற்றும் ஆ வில் தனித்தனியே தேர்ச்சி பெறவேண்டும்.
- செயல்திறன் தேர்வுக்கு, அறிவிக்கை அடிப்படையில் காலிபபணியிடங்களின் எண்ணிக்கை ஐந்து அல்லது ஐந்திற்கு மேல் இருந்தால், சம்மந்தப்பட்ட பதவிக்கான பொது எழுத்து தேர்வில் தகுதி மற்றும் அவர்கள் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்களிலிருந்து 1 : 4 விகிதப்படி அல்லது மெட்ராஸ் உயர்நீதிமன்ற ஆட்சேர்ப்பு பிரிவினால் நிர்ணயிக்கும் விகிதப்படியும், ஒதுக்கீட்டு விதியைப் பின்பற்றியும் ஒவ்வொரு பதவியின் வகைக்கும் தனித்தனியே அழைக்கப்படுவார்கள்.
- செயல்திறன் தேர்வுக்கு, அறிவிக்கை அடிப்படையில் காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை நான்கு அல்லது நான்கிற்கு கீழ

இருந்தால, சம்மந்தப்பட்ட பதவிக்கான பொது எழுத்து தேர்வில் தகுதி மற்றும் அவர்கள் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்களிலிருந்து 1 : 5 விகிதப்படி அல்லது மெட்ராஸ் உயர்நீதிமன்ற ஆட்சேர்ப்பு பிரிவினால் நிர்ணயிக்கும் விகிதப்படியும், ஒதுக்கீட்டு விதியைப் பின்பற்றியும் ஒவ்வொரு பதவியின் வகைக்கும் தனித்தனியே அழைக்கப்படுவார்கள்.

- ஆயினும், ஒவ்வொரு ஒதுக்கீட்டுப் பிரிவிலும (பொது பிரிவ உட்பட), அந்தந்த ஒதுக்கீட்டுப் பிரிவுகளுக்குரிய வரம்புநிலை மதிப்பெண்கள் (cut off marks) சமமாக பெறும் விண்ணப்பதாரர்கள் அனைவரும் செய்முறைத் தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர். எனவே, பொது எழுத்துத் தேர்வில் பெறப்படும் தகுதிக்கான குறைந்தபட்ச மதிப்பெண்கள் அடிப்படையில் மட்டும் ஒரு விண்ணப்பதாரர் செயல்திறன் தேர்வுக்கு தகுதியானவராக உரிமை கோர முடியாது.
- எழுத்துத் தேர்வில் **பகுதி-அ** வில் பெறப்படும் குறைந்தபட்ச மதிப்பெண்கள் தகுதிக்கானது மட்டுமே. அந்த மதிப்பெண்கள் தேர்வாளர்களின் இறுதிப்பட்டியலில் தயாரிக்கும்போது கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.
- **பகுதி-ஆ** வில் பெறப்படும் மதிப்பெண்கள் அடிப்படையில் மட்டுமே ஒரு விண்ணப்பதாரர் தெரிவு செய்யும் முறையில் அடுத்த நிலைக்கு தேர்ந்தெடுக்கப்படுவார்.

**செயல்திறன் தேர்வு**

**(மொத்த மதிப்பெண்கள் - 40)**

II **(தகுதிக்கான குறைந்தபட்ச மதிப்பெண்கள் - 10)**

**தூய்மைப் பணியாளர் மற்றும் சுகாதார பணியாளர் பதவிகளுக்கு**

மேற்கூறிய பொது எழுத்துத் தேர்வில் தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் செயல்திறன் தேர்வுக்கு அழைக்கப்பட்டு கீழ்கண்டவற்றில் அவர்களின் திறமைகள் பரிசோதிக்கப்படும்:-

தரையை தூய்மை செய்தல், குளியலறை மற்றும் கழிவறைகளை சுத்தம் செய்தல, நீர் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு, சுத்தப்படுத்துதல, தூய்மை செய்தல் போன்ற இதர வேலைகள்.

**தோட்டப்பணியாளா மற்றும வாட்டர்மேன் பதவிகளுக்கு:-**

மேற்கூறிய பொது எழுத்துத் தேர்வில் தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் செயல்திறன் தேர்வுக்கு அழைக்கப்பட்டு கீழ்கண்டவற்றில் அவர்களின் திறமைகள் பரிசோதிக்கப்படும:-

தோட்ட பராமரிப்பு, தோட்ட உபகரணங்களைக் கையாளுதல் மற்றும் பராமரிப்பு செய்யும் முறைகள, மரங்கள் மற்றும் செடிகளை வெட்டுதல், தண்டு/கிளை வெட்டுதல், கவாத்து செய்தல், மரம் / செடிகளை நடுதல் மற்றும் பூச்செடிகளை பதியம் போடுதல், நீர் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு, சுத்தப்படுத்துதல, தூய்மை செய்தல் போன்ற இதர வேலைகள்.

**காவலர் பதவிக்கு**

மேற்கூறிய பொது எழுத்துத் தேர்வில் தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் செயல்திறன் தேர்வுக்கு அழைக்கப்பட்டு கீழ்கண்டவற்றில் அவர்களின் திறமைகள் பரிசோதிக்கப்படும:-

அலுவலக பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு, உள்ளே / வெளியே செல்லும் பதிவேடு பராமரிப்பு, வளாகத்தில் ரோந்து வருதல், இதர அலுவலக வேலைகள், அடிப்படை பாதுகாப்பு மற்றும் தீயணைப்பு பாதுகாப்பு பற்றிய அறிவு.

**III**

**சான்றிதழ் சரிபார்ப்பு**

- ஒரு பதவிக்கு காலிப்பணியிடங்களின எண்ணிக்கை ஐந்து அல்லது ஐந்திற்கு மேல் இருந்தால், சம்மந்தப்பட்ட செயல்திறன்தேர்வில் தேர்ச்சி பெற்ற விண்ணப்பத்தாரர்களிலிருந்து, அவர்கள் பெற்ற மதிப்பெண்கள் மற்றும தகுதியின அடிப்படையில், ஒதுக்கீட்டு விதியை பின்பற்றி, வாய்மொழி தேர்வுக்கு 1:2 விகிதப்படி அல்லது மெட்ராஸ் உயர் நீதிமன்ற ஆட்சேர்ப்பு பிரிவு நிர்ணயிக்கும் எண்ணிக்கையில், ஒவ்வொரு பதவியின் வகையிலும் தனித்தனியே தேர்வு செய்யப்படுவர்.

- ஒரு பதவிக்கு காலிப்பணியிடங்களில் எண்ணிக்கை நான்கு அல்லது நான்கிற்கு கீழ இருந்தால், சம்மந்தப்பட்ட செயல்திறன்தேர்வில் தேர்ச்சி பெற்ற விண்ணப்பத்தாரர்களிலிருந்து, அவர்கள் பெற்ற மதிப்பெண்கள் மற்றும தகுதியின அடிப்படையில், ஒதுக்கீட்டு விதியை பின்பற்றி, வாய்மொழி தேர்வுக்கு 1:3 விகிதப்படி அல்லது மெட்ராஸ் உயர் நீதிமன்ற ஆட்சேர்ப்பு பிரிவு நிர்ணயிக்கும் எண்ணிக்கையில், ஒவ்வொரு பதவியின் வகையிலும் தனித்தனியே தேர்வு செய்யப்படுவர்.
- இருப்பினும், ஒவ்வொரு ஒதுக்கீட்டு பிரிவிலும் ஒத்த வரம்பு நிலை மதிப்பெண்கள் பெற்றிருக்கும் விண்ணப்பதாரர்கள் அனைவரும் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படுவார்கள். ஆகையால், செயல்திறன் தேர்வில் குறைந்தபட்ச தேர்ச்சி மதிப்பெண்கள் பெற்றிருப்பதாலேயே ஒரு விண்ணப்பதாரர் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு பங்கேற்க உரிமை கோர முடியாது.
- வீடுகளில் வேலை பார்க்கும் NMR விண்ணப்பதாரர்கள் மற்றும் அவர்களுக்கு இணையான மற்ற விண்ணப்பதாரர்களுக்கு, ஒரு வருட அனுபவத்திற்கு 2 மதிப்பெண்கள் என்ற விகிதத்தில், அவர்கள் பணியாற்றிய காலத்திற்கேற்ப அதிகபட்சம் 20 மதிப்பெண்கள் வரை சிறப்பு நிலை மதிப்பெண்களாக வழங்கப்படும்.

  வீடுகளில் வேலை பார்க்கும் NMR விண்ணப்பதாரர்கள் அனுபவ சான்றிதழ்களை பொதுப்பணித்துறையின் (PWD) அரசிதழிட்ட அதிகாரிகளிடமும், NMR-க்கு இணையான மற்ற விண்ணப்பதாரர்கள், அனுபவ சான்றிதழ்களை மாண்புமிகு நீதியரசர்களின் / மந்திரிகளின் நேர்முக உதவியாளரிடமும் பெற்றிருத்தல் வேண்டும். அனுபவ சான்றிதழ்களை, விண்ணப்பம் செய்யும் போது பெற்றிருத்தல் வேண்டும். அச்சான்றிதழ்களை கோரும் போது பதிவேற்றம் செய்ய வேண்டும்.

7. தெரிவு பட்டியல் தயாரித்தல்

விண்ணப்பதாரர்கள், எழுத்துத் தேர்வில் பகுதி-ஆ, செயல்திறன் தேர்வு மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பில பெற்ற மொத்த மதிப்பெண்களின் தகுதி அடிப்படையிலும் மற்றும் இடஒதுக்கீட்டு விதிமுறையை பின்பற்றியும் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியே தேர்வானவர்களின் இறுதி பட்டியல் முடிவுசெய்யப்படும்.

8. பணியின் தன்மைகள

அ) தூய்மைப் பணியாளர், தோட்டப்பணியாளா, வாட்டர்மேன், சுகாதார பணியாளர் மற்றும் காவலர் பதவிகளுக்கு தேர்வு செயயப்பட்ட அனைத்து விண்ணப்பதாரர்களும், தேவை மற்றும் அவசியத்திற்கேற்ப நீதிமன்றங்களுக்கோ, அலுவலகத்திற்கோ, தமிழ்நாடு நீதித்துறை பயிற்சி மையத்திலோ அல்லது நீதிபதிகள மற்றும் பதிவாளர்களின் வீடுகளுக்கோ, அலுவலகப் பணிகளுக்கோ / பாதுகாப்பு பணிகளிக்கோ மற்றும் அனைத்து வீட்டுப் பணிகளாகிய வீட்டு பராமரிப்பு, நீர் பராமரிப்பு, சுகாதாரம், தரையை தூய்மை செய்தல், குளியலறை மற்றும் கழிவறைகளை சுத்தம் செய்தல், தோட்டப் பணிகள மற்றும் இதரப் பணிகளை மேற்கொள்ள நியமிக்கப்படுவர்.

ஆ) மேற்குறிப்பிட்ட பணிகளுக்கு தேர்வு செய்யப்படும் பணியாளர்கள் தங்கள் மேலதிகாரிகள் அவ்வப்போது வழங்கும் அனைத்து பணிகளையும் விடுமுறை நாட்களிலும் மற்றும் பணிநேரம் கடந்த நிலையிலும் அர்ப்பணிப்புடன் செய்ய வேண்டும்.

இ) தேர்வு செய்யப்பட்ட அனைத்து விண்ணப்பதாரர்களும் எவ்வித தொற்றுநோய் அற்றவராகவும், நற்பண்பு மற்றும் நல்லொழுக்கம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

## 9. பணி அமர்த்தப்படும் இடம்

தேர்வு செய்யப்படும் நபர்கள் மெட்ராஸ் உயர்நீதிமன்றத்திலோ, மெட்ராஸ் உயர்நீதிமன்ற மதுரைக் கிளையிலோ அல்லது தமிழ்நாடு நீதித்துறை பயிற்சி மையம் சென்னையிலோ அல்லது கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் உள்ள தமிழ்நாடு நீதித்துறை மண்டல பயிற்சி மையங்களிலோ பணியமர்த்தப்படுவர். மேலும், மேலே கூறப்படும் இடங்களுக்கு எந்தவொரு முன் அறிவிப்புமின்றி எந்த நேரத்திலும் நிர்வாகத் தேவைக்கேற்ப பணி மாற்றம் செய்யப்படுவர்.

## 10. தேர்வு நடைபெறும் இடம்

(அ) பொது எழுத்துத் தேர்வு சென்னை மற்றும் /அல்லது மெட்ராஸ் உயர்நீதிமன்றம் ஆட்சேர்ப்பு பிரிவு முடிவு எடுக்கும் வேறு இடத்திலோ நடைபெறும்.

(ஆ) அனைத்துப் பதவிகளுக்கும் செயல்திறன் தேர்வு மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பு, தகுதிபெற்ற விண்ணப்பதாரர்களுக்கு சென்னையில் மட்டும் நடைபெறும்.

(இ) தேர்வு நடைபெறும் இடம், தேதி, தெரிவு செய்யும் முறை மற்றும் குறைந்தபட்ச மதிப்பெண், தகுதி, மறுமதிப்பீடு / மறுகூட்டல் மற்றும் இவ்வறிவிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள விதிகளை தளர்த்தவோ அலலது மாற்றவோ அல்லது விடைத்தாள் சம்மந்தப்பட்ட எவ்வித வேண்டுகோள்களோ, விண்ணப்பங்களோ எந்தச் சூழ்நிலையிலும் ஏற்கப்படமாட்டாது.

(ஈ) பொது எழுத்துத் தேர்வ, செயல்திறன் தேர்வு, சான்றிதழ சரிபார்ப்பில் பங்கேற்க வரும் விண்ணப்பதாரர்களுக்கு எவ்வித பயணப்படியோ / தினப்படியோ வழங்கப்படமாட்டாது.

11. **பொதுவான கோரிக்கைகள் / தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் தகவல் அறிதல் / மறு-மதிப்பீடு/மறு-கூட்டலுக்கான கோரிக்கை)**:-

| | |
|---|---|
| (அ) | பணி நியமன நடவடிக்கைகள் இறுதியடையும் வரை, யாருக்கும் தேர்வு பற்றிய எவ்வித தகவலும் வழங்கப்படமாட்டாது. |
| (ஆ) | விடைத்தாள் திருத்தியவர்/ விண்ணப்பத்தை/ சான்றிதழ்களை சரிபார்த்த அதிகாரி பற்றிய தகவலோ வழங்கப்படமாட்டாது. |
| (இ) | எந்த விண்ணப்பதாரரும் பணி நியமன நடவடிக்கைகள் இறுதி செய்யப்படும் வரை, எழுததுத் தேர்வு விடைத்தாள்களில் நகல்களை பார்வையிடவோ/பெறவோ அனுமதிக்கப்படமாட்டார். |
| (ஈ) | எழுத்துத் தேர்வின் விடைத்தாள்கள், செயல்திறன் தேர்வின் மதிப்பெண்களை மறு-மதிப்பீடு மற்றும் மறு-கூட்டல் செய்வதற்கான வேண்டுதல் ஏற்கப்படமாட்டாது. |
| (உ) | செயல்திறன் தேர்வு மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பில் தேர்வர்கள் பல்வேறு மதிப்பீட்டு தலைப்புகளின் கீழ் பெற்ற மதிப்பெண்கள் ஏதேனும் இருந்தால் வழங்கப்படமாட்டாது. |

**மெட்ராஸ் உயர் நீதிமன்றம்** **S.அல்லி**
**நாள். 06.04.2025.** **தலைமை பதிவாளர்.**

## ANNEXURE TO NOTIFICATION No. 73 / 2025

Abbreviations used in the Annexure: GT - General Turn; BC - Backward Class; BC(M) - Backward Class (Muslim); MBC/DC - Most Backward Class/ Denotified Community; SC - Scheduled Caste; SC(A) - Scheduled Caste (Arunthathiyars); ST - Scheduled Tribe; W - Women; DW - Destitute Widow; PSTM - Persons Studied in Tamil Medium).

| Distribution of vacancies for the Post of Sweeper | | | | |
|---|---|---|---|---|
| **Sl. No.** | **Category** | **Current Vacancies** | **Backlog Vacancies** | **Total No of Vacancies** |
| 1 | GT | 8 | 0 | 8 |
| 2 | GT(PSTM) | 2 | 0 | 2 |
| 3 | GT (W) | 4 | 0 | 4 |
| 4 | GT(W)(PSTM) | 1 | 0 | 1 |
| 5 | GT (W)(DW) | 1 | 0 | 1 |
| 6 | GT (PRIORITY) | 4 | 0 | 4 |
| 7 | GT(PSTM) (PRIORITY) | 1 | 0 | 1 |
| 8 | GT (W) (DEAF AND HARD OF HEARING) | 1 | 0 | 1 |
| 9 | BC (OTHER THAN BCM) | 6 | 0 | 6 |
| 10 | BC (OTHER THAN BCM) (PSTM) | 2 | 0 | 2 |
| 11 | BC (OTHER THAN BCM) (W) | 4 | 0 | 4 |
| 12 | BC (OTHER THAN BCM) (W)(PSTM) | 1 | 0 | 1 |
| 13 | BC (OTHER THAN BCM) (W)(DW) | 1 | 0 | 1 |
| 14 | BC (OTHER THAN BCM) (BLINDNESS AND LOW VISION) | 1 | 0 | 1 |
| 15 | BC (OTHER THAN BCM) (AUTISM, INTELLECTUAL DISABILITY, SPECIFIC LEARNING DISABILITY & MENTAL ILLNESS / MULTIPLE DISABILITIES) (PRIORITY) | 1 | 0 | 1 |
| 16 | BC (OTHER THAN BCM) (PRIORITY) | 2 | 0 | 2 |
| 17 | BC (OTHER THAN BCM) (PSTM) (PRIORITY) | 1 | 0 | 1 |
| 18 | BC(M) | 1 | 0 | 1 |
| 19 | BC(M)(PSTM) | 1 | 0 | 1 |
| 20 | BC(M)(W) | 1 | 0 | 1 |
| 21 | MBC/DC | 6 | 0 | 6 |
| 22 | MBC/DC (PSTM) | 2 | 0 | 2 |

| | | | | |
|---|---|---|---|---|
| 23 | MBC/DC (W) | 4 | 0 | 4 |
| 24 | MBC/DC (PRIORITY) | 3 | 0 | 3 |
| 25 | SC | 3 | 0 | 3 |
| 26 | SC (PSTM) | 2 | 0 | 2 |
| 27 | SC (W) | 2 | 0 | 2 |
| 28 | SC (W)(PSTM) | 1 | 0 | 1 |
| 29 | SC (LOCOMOTOR DISABILITY (INCLUDING CEREBRAL PALSY, LEPROSY CURED, DWARFISM, ACID ATTACK VICTIMS, MUSCULAR DYSTROPHY AND LD OTHERS) (PRIORITY) | 1 | 0 | 1 |
| 30 | SC (PRIORITY) | 2 | 0 | 2 |
| 31 | SC(A) | 2 | 0 | 2 |
| 32 | SC(A) (W)(PSTM) | 1 | 0 | 1 |
| **TOTAL** | | **73** | **0** | **73** |

| Distribution of vacancies for the Post of Gardener | | | | |
|---|---|---|---|---|
| **Sl. No.** | **Category** | **Current Vacancies** | **Backlog Vacancies** | **Total No of Vacancies** |
| 1 | GT | 4 | 0 | 4 |
| 2 | GT (W) | 2 | 0 | 2 |
| 3 | GT(W)(PSTM) | 1 | 0 | 1 |
| 4 | GT (BLINDNESS AND LOW VISION) | 1 | 0 | 1 |
| 5 | GT(PSTM) (PRIORITY) | 1 | 0 | 1 |
| 6 | BC (OTHER THAN BCM) | 2 | 0 | 2 |
| 7 | BC (OTHER THAN BCM) (W) | 1 | 0 | 1 |
| 8 | BC (OTHER THAN BCM) (W)(PSTM) | 1 | 0 | 1 |
| 9 | BC (OTHER THAN BCM) (PRIORITY) | 1 | 0 | 1 |
| 10 | BC(M) (W) (DW) | 1 | 0 | 1 |
| 11 | MBC/DC | 2 | 0 | 2 |
| 12 | MBC/DC (W) | 1 | 0 | 1 |
| 13 | MBC/DC (LOCOMOTOR DISABILITY (INCLUDING CEREBRAL PALSY, LEPROSY CURED, DWARFISM, ACID ATTACK VICTIMS, MUSCULAR DYSTROPHY AND LD OTHERS) | 1 | 0 | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| 14 | MBC/DC (PRIORITY) | 1 | 0 | 1 |
| 15 | SC | 1 | 0 | 1 |
| 16 | SC (W) | 1 | 0 | 1 |
| 17 | SC (PRIORITY) | 1 | 0 | 1 |
| 18 | SC(A) (PSTM) | 1 | 0 | 1 |
| **TOTAL** | | **24** | **0** | **24** |

| **Distribution of vacancies for the Post of Waterman** | | | | |
|---|---|---|---|---|
| **Sl. No.** | **Category** | **Current Vacancies** | **Backlog Vacancies** | **Total No of Vacancies** |
| 1 | MBC/DC (PRIORITY) | 1 | 0 | 1 |
| 2 | SC(A) (W) (DW) (PSTM) (PRIORITY) | 1 | 0 | 1 |
| **TOTAL** | | **2** | **0** | **2** |

| **Distribution of vacancies for the Post of Sanitary Worker** | | | | |
|---|---|---|---|---|
| **Sl. No.** | **Category** | **Current Vacancies** | **Backlog Vacancies** | **Total No of Vacancies** |
| 1 | GT | 7 | 0 | 7 |
| 2 | GT(PSTM) | 1 | 0 | 1 |
| 3 | GT (W) | 3 | 0 | 3 |
| 4 | GT(W)(PSTM) | 1 | 0 | 1 |
| 5 | GT (PRIORITY) | 2 | 0 | 2 |
| 6 | GT (W) (DEAF AND HARD OF HEARING) | 1 | 0 | 1 |
| 7 | GT(PSTM) (PRIORITY) | 1 | 0 | 1 |
| 8 | BC (OTHER THAN BCM) | 4 | 0 | 4 |
| 9 | BC (OTHER THAN BCM) (PSTM) | 2 | 0 | 2 |
| 10 | BC (OTHER THAN BCM) (W) | 3 | 0 | 3 |
| 11 | BC (OTHER THAN BCM) (W)(PSTM) | 1 | 0 | 1 |
| 12 | BC (OTHER THAN BCM) (AUTISM, INTELLECTUAL DISABILITY, SPECIFIC LEARNING DISABILITY & MENTAL ILLNESS / MULTIPLE DISABILITIES) (PRIORITY) | 1 | 0 | 1 |
| 13 | BC (OTHER THAN BCM) (PRIORITY) | 1 | 0 | 1 |
| 14 | BC(M) | 1 | 0 | 1 |
| 15 | BC(M)(PSTM) | 1 | 0 | 1 |
| 16 | MBC/DC | 3 | 0 | 3 |

| | | | | |
|---|---|---|---|---|
| 17 | MBC/DC (PSTM) | 2 | 0 | 2 |
| 18 | MBC/DC (W) | 3 | 0 | 3 |
| 19 | MBC/DC (PRIORITY) | 2 | 0 | 2 |
| 20 | SC | 2 | 0 | 2 |
| 21 | SC (PSTM) | 1 | 0 | 1 |
| 22 | SC (W) | 1 | 0 | 1 |
| 23 | SC (W)(PSTM) | 1 | 0 | 1 |
| 24 | SC (PRIORITY) | 2 | 0 | 2 |
| 25 | SC(A) | 1 | 0 | 1 |
| 26 | SC(A) (W)(PSTM) | 1 | 0 | 1 |
| **TOTAL** | | **49** | **0** | **49** |

| Distribution of vacancies for the Post of Watchman | | | | |
|---|---|---|---|---|
| **Sl. No.** | **Category** | **Current Vacancies** | **Backlog Vacancies** | **Total No of Vacancies** |
| 1 | GT (W)(DW) | 1 | 0 | 1 |
| 2 | BC (OTHER THAN BCM) (PRIORITY) | 1 | 0 | 1 |
| 3 | MBC/DC (PRIORITY) | 0 | 1 | 1 |
| 4 | SC(A) (W) (DW) (PSTM) (PRIORITY) | 0 | 1 | 1 |
| **TOTAL** | | **2** | **2** | **4** |